காகிதக் கொக்கு



மோலி பாங்















முக்கியமான தெரு ஒன்றில் ஒரு உணவகத்தைத் தொடங்கினார் ஒருவர். அவர் நன்றாக சமைத்து மக்களுக்கு சுவையான உணவளிக்க விரும்பினார். அதிகாலையிலிருந்து இரவு வரை உணவகம் திறந்திருப்பதால் நல்ல வருமானம். அவர் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.





ஆனால் சில ஆண்டுகள் கழித்து அருகிலேயே ஒரு புதிய நெடுஞ்சாலை போடப்பட்டது. இப்போது பயணிகள் யாரும் அவரது உணவகத்தில் நிற்காமல் நெடுஞ்சாலையில் நேரடியாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சென்று விடுகிறார்கள் . பல நாட்கள் ஒரு வாடிக்கையாளரும் வராமல் கடந்துவிட்டன. தட்டுகளையும், கோப்பைகளையும், மேசைகளையும் தூசி தட்டித் துடைப்பதைத் தவிர, வேறு வேலை எதுவும் இல்லாததால் அவருக்கு வருமானமே இல்லை.



ஒரு நாள் மாலை ஒரு வெளியூர்க்காரர் உணவகத்திற்கு வந்தார். கந்தலான ஆடைகளை அணிந்திருந்தாலும் அவரது முகம் பொலிவாகவும், அமைதியாகவும் இருந்தது.




அவர் சாப்பிட பணம் இல்லை என்று சொன்ன பிறகும் உணவக உரிமையாளர் அவரை வரவேற்று சுவையான உணவை சமைத்து, அவருக்கு மிகுந்த அன்புடன் பரிமாறினார்.



சாப்பிட்ட பிறகு, அந்த வெளியூர்க்காரர், "நான் உங்களுக்கு பணம் கொடுக்க இயலாது, ஆனால் வேறு ஒன்று தருகிறேன்" என்றார்.


வெளியூர்க்காரர் காகிதக் கைக்குட்டை ஒன்றை மேசையிலிருந்து எடுத்து ஒரு கொக்கு செய்து கொடுத்தார். " இதை வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் கைகளைத் தட்டினால், இந்த பறவை உயிர் பெற்று உங்களுக்காக நடனமாடும். நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்." என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.







அவர் சொன்னது போலவே கைகளைத் தட்டியவுடன் காகிதக் கொக்கு உயிருள்ள பறவையாக மாறி நளினமாக நடனமாடத் தொடங்கியது.







விரைவில் , நடனமாடும் கொக்கின் புகழ் எங்கும்
பரவியது. அந்த அதிசயக் கொக்கைப் பார்க்க வெகு
தூரத்திலிருந்தெல்லாம் மக்கள் வர ஆரம்பித்தனர்.



உணவகம் எப்போதும் வாடிக்கையாளர்களால் நிரம்பியிருந்ததால் உரிமையாளர் மீண்டும் மகிழ்ச்சியாக இருந்தார்.

அவர் பகல் இரவு எந்நேரமும் வாடிக்கையாளர்களுக்கு சமைத்து உணவளித்தார்.



வாரங்கள் கழிந்தன.



மாதங்கள் கழிந்தன.





ஒரு நாள் மாலை ஒரு நபர் உணவகத்திற்கு வந்தார். கந்தலான ஆடைகளை அணிந்திருந்தாலும் அவரது முகம் பொலிவாகவும் அமைதியாகவும் இருந்தது. உரிமையாளர் அவரைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டுகொண்டு மிகவும் ஆனந்தப்பட்டார்.



அவர் எதுவும் பேசாமல் தனது
சட்டைப் பையில் இருந்து ஒரு
புல்லாங்குழலை வெளியே எடுத்து,
வாசிக்கத் தொடங்கினார்.






இசையைக் கேட்டு, அலமாரியில்
வைக்கப்பட்டிருந்த கொக்கு கீழே
பறந்து வந்து, இதுவரை
ஆடியதெற்கெல்லாம் மேலாக
அற்புதமாக நடனமாடியது.



சற்றைக்கெல்லாம் அவர் புல்லாங்குழல் வாசிப்பதை நிறுத்திவிட்டு மீண்டும் தனது சட்டைப் பையில் வைத்தார். கொக்கின் முதுகில் ஏறிக் கொண்டு பறந்து மறைந்தார்.





உணவகம் இன்னும் சாலையின் ஓரத்தில் தான் இருக்கிறது. இன்னமும் வாடிக்கையாளர்கள் நல்ல உணவைச் சாப்பிட வருகிறார்கள். அந்த மென்மையான நபரைப் பற்றியும் காகிதக் கைக்கட்டையால் செய்யப்பட்ட கொக்கைப் பற்றியுமான கதைகளை பேசிக் கொள்கிறார்கள்.

ஆனால் அதன்பிறகு அந்த நபரையோ நடனமாடும் கொக்கையோ யாரும் பார்க்கவில்லை.



முற்றும்

